**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 384/2022**

பெயர் : விஜயா (PW1) (Cross continuation)

த/க/பெ. :

தேதி :02.04.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் மாமனார் கணேசன் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். அவர் 08.03.1998 ல் காலமானார் என்றால் 1999 ல் காலமானார். என் மாமனார் சிறு வயது முதல் மனநிலை பாதிக்ப்பட்டிருந்ததால் அவர் சம்பாதிக்ககூடிய நிலையில் இல்லை என்றால் சரியல்ல. திருமணத்தின் போது என் மானாருக்கு வயது 35, மாமியாருக்கு 18 என்றால் அது குறித்து தெரியாது. திருமணம் ஆகி மறு வருடமே முதல் பிரதிவாதி பிறந்து விட்டார் என்றாலும் அவரை பாதுகாக்க முடியாததால் தாய்மாமன் வீட்டிற்கு தஞ்சாவூருக்கு அனுப்பி விட்டார்கள் என்றால் சரிதான். அவர்சிறு வயதிலிருந்தே தாய் மாமன் வீட்டில் வளர்ந்து ஒரு பைனான்ஸ் கம்பெனியில் சேர்ந்தார் என்பது தெரியாது. பிறகு தனியார் பைனான்ஸ் கம்பெனி வைத்திருந்தார் என்றால் முன்னர் வைத்திருந்தார். அந்த வருமானத்தை கொண்டு தான் பி, சி அட்டவணை சொத்துக்களை முதல் பிரதிவாதி அவர் சொந்த உழைப்பை கொண்டு வாங்கினார் என்றாலும் என் மாமனார் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. அது என் மாமனாரின் அப்பாவிற்கு சொந்தமான சொத்துக்கள் அதை என் மாமனாரின் சகோதரர்களுக்குள் பிரித்துக் கொண்டார்கள். பி, சி அட்டவணை சொத்துக்கள் பிரதிவாதி பெயரில் உள்ளதால் தான் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சாஆ. 2 பி அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா தான் வா.சாஆ 2 என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. பி ஷெடியூல் சொத்தை முதல் பிரதிவாதி வாங்கியதால் தான் அவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. சி ஷெடியூல் 6 அயிட்டம் சொத்துக்களும் கோவில் நிலம் என்றால் அவற்றை என் கணவர் வாங்கி உள்ளார். என் கணவர் வாங்கியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் வாங்கவில்லை என்பதால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வாசா.ஆ. 1ன் படி தாவா ஏ ஷெடியூல் முதல் அயிட்ட சொத்து முதல் பிரதிவாதிக்கு அளிக்கபட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் செல்லாது என்பதற்காக தான் வழக்கு

போட்டுள்ளேன். தாவா ஏ ஷெடியூல் 2 வது அயிட்டம் சர்வே எண். 485/11ல் 390 குழில் 260 குழி முதல் பிரதிவாதிக்கும் என் கணவருக்கு 130 குழியும் அளிக்கப்பட்டுள்ளது என்றால் அது கோவில் சொத்து. அது செல்லாது. அது கோவில் சொத்து அல்ல பட்டா சொத்து என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தில் தேதிய நெடுஞ்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் தொகை வித்தியாசம் ஏற்பட்டதால் தான் வழக்கு ஏற்பட்டது என்றால் சரிதான். வழக் குபோட்டர்ல சமமாக இழபிட்டு தொகையை பிரித்துக் கொள்ளலாம் என்பதால் வழக்கு போட்டுள்ளேன் என்றால் என் மாமியாருக்கும் சேர்த்து 1/3 பங்கு பிரித்துக் கொள்ளாலம் என்று வழக்கு போட்டுள்ளேன். யார் யாருக்கு எவ்வளவு தொகை ஒதுக்கபட்டுள்ளது என்பதற்காக வா.சா.ஆ 3 தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 4 திரு. பாலதண்டாயுதம் என்ற வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார். அந்த அறிவிப்பிற்கு ஒப்புதல் அட்டை போடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு போட்டது வழக்கறிஞர் திரு. எஸ். முத்துக்குமாரும், திரு. பாலதண்டாயுதம் என்றால் சரிதான். திரு. முத்துக்குமார் அரசு வழக்கறிஞர் என்பதால் தற்போதையை வழக்கறிஞரை நியமித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 வழக்கறிஞர் அறிவிப்பில் என்னுடைய தற்போதையை வழக்கறிஞர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த அறிவிப்பு பொய்யாக தயாரிக்கப்படடது என்றால் சரியல்ல. இந்த அறிவிப்பு யாருக்கும் அனுப்பாமல் பொய்யாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பிடு தொகை இதுவரையில் யாருக்கும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அரசு வழக்கறிஞர் மூலம் நான் வழக்கு போட்டுள்ளதால் அவரின் செல்வாக்கை பயன்படுத்தி யாருக்கும் தொகை கொடுக்காமல் நிறுத்தி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் குறிப்பிட்டுள்ள பி அட்டவணை சொத்து சர்வே எண்.150/2 ல் 2 ஏக்கர் 5 செண்ட் 2002ல் பாக பிரிவினை படி முதல் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பொய்யான ஆவணம். வழக்கு சி அட்டவணை 6 வது அயிட்டம் சொத்து கோவில் சொத்து அதில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை என் கணவருக்கு பாகத்தில் கொடுத்துள்ளார்கள் என்றால் யாரும் கொடுக்கவில்லை அவர் கடை வைத்திருந்தார். 6 வது அயிட்டத்தில் மொத்தம் 5 வீடுகள் உள்ளது என்றால் நான் திருமணம் ஆகி வந்த பின்னர் கட்டியது. ஒரு வீட்டில் நான் குடியிருக்கிறேன் என்றாலும் 4 வீட்டை வாடகைக்கு விட்டுள்ளேன் என்றாலும் சரிதான். அது என் வீடு. ஒரு வீட்டிற்கு 3 ஆயிரம் வாடகை

வருகிறது. வீட்டை என் பிராதில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. பாகபிரிவினை வழக்கில் சேர்க்க வேண்டிய சொத்துக்களை சேர்க்காததால் என் வழககு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 5 வீடுகளையும் முதல்பிரதிவாதியால் கட்டப்பட்டு அவரின் சகோதரர்ள ன்ற முறையில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவருக்கு சம்பாதிக்கும் திறமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சி அட்டவணை சொத்தில் முதல் அயிட்டம் முதல் பிரதிவாதிக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றால் பதில் சொல்ல விரும்ப வில்லை. சி அட்டவணை சொத்தில் 2 வது அயிட்டம் 200 குழி முதல் பிரதிவாதிக்கும், 250 குழி என் கணவருக்கும் பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சி அட்டவணை 3, 4 அயிட்டம் என் மாமியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் விளையாத இடத்தை ஒதுக்கி உள்ளார்கள். சி அட்டவணையில் 5 வது அயிட்டம் என் கணவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. முதல் பிரதிாவாதி சி ஷெடியூல் தன் பெயரில் பகுதிக்கு வாங்கி என் கணவருக்கும் என் மாமியாருக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 6 வது அயிட்டத்தில் உள்ள வீடுகளுக்கு என் கணவர் பெயரில் வீட்டு வரி மாறியுள்ளது என்றால் சரிதான். அது போல் கோவில் நிலங்கள் என் கணவர் பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். பாக பிரிவினை படி என் கணவருலுக்கு ஒதுக்கப்ப்ட்ட சொத்துக்களுக்கு வீட்டு வரி பகுதி என் கணவர் பெயரில் மாறி உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் வாங்கியது. 2002 பாக பிரிவினையை ஏற்றுக் கொண்டு பின்னர் 18 ஆண்டுகள் கழித்து அது செல்லாது என்று வழக்கு போட்டுள்ளது முரண் தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசாங்கத்தால் கொடுக்கப்படும் இழப்பீடு முதல் பிரதிவாதிக்கு அதிகமாக வருவதால் அதை தடுக்கம் நோக்கில் இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. திருக்கடையூரில் சாமி சன்னதியில் பேன்சி கடை உள்ளது என்றால் அதை விற்றுவிட்டார்கள். அந்த விபரத்தை என் பிராதில் சொல்லவில்லை. பாகபிரிவினைக்கு பின்னர் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சில சொத்துக்களை நாங்கள் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அது வாடகை கடை காலி செய்து விட்டோம். முதல் பிரதிவாதி, 2, 3 பிரதிாதிகளுக்கு புஞ்சை 440, 485 ல் 30 குழி விற்றுள்ளார். முதல் பிரதிவாதி எந்த சொத்தையும் விற்கவில்லை என்றாலும் விற்பனை பொய் என்பதால் ஆவணம் போடடவிலலை என்றாலும் 2, 3 பிரதிவாதிகள்

அவசியமற்ற தரப்பினர்கள் என்றாலும் சரியல்ல. 4 முதல் 6 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. என் வழக்கு காலவாதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.